# மார்கழிக் கிறுக்கல்கள்

மரபுக்கவிதை



தென்றல் கவி

தமிழ்ச்சிட்டு

# மார்கழிக் கிறுக்கல்கள்

மரபுக்கவிதைகள் / கோலங்கள்

தென்றல் கவி - தமிழ்ச்சிட்டு

**தஞ்சைத் தமிழ் மன்றம்**

வலங்கைமான்

# நூல் விவரம்


| | |
|---|---|
| நூலின் பெயர் | : மார்கழிக் கிறுக்கல் |
| ஆசிரியர் | : தென்றல் கவி |
| வகைமை | : மரபுக்கவிதைகள் / கோலங்கள் |
| உரிமை | : ஆசிரியருக்கு |
| முதல் பதிப்பு | : ஏப்ரல் 2022 |
| வடிவமைப்பு | : தமிழ்நெஞ்சம் பிரான்சு |
| வெளியீடு | : தஞ்சைத் தமிழ் மன்றம்<br>12 புங்கஞ்சேரிமுதன்மைச்சாலை<br>வலங்கைமான்<br>திருவாரூர் மாவட்டம் |
| அச்சிட்டோர் | : பாரதம் பிரிண்டர்ஸ்<br>திருச்சேறை<br>திருவாரூர் மாவட்டம் |

# என்னுரை

*மார்கழி மாதம் என்றாலே நம் நினைவிற்கு வருவது சில்லெனப் பனி.. கோவில்களில் இசைக்கப்படும் திருப்பாவை, திருவெம்பாவை பாடல்கள் அடுத்ததாகக் கோலங்கள் தானே...*

*கோலங்கள் வரைவது என்பது தனிக்கலை... சிறுவயது முதலே இதன்மேல் எனக்கு ஏகப்பட்ட காதல்.. விதவிதமான வண்ணங்கள் தீட்டி நம் கற்பனைகளுக்கு ஏற்றவகையில் வடிவங்கள் மாற்றி வரைவது என்றால் கொள்ளை இன்பம்!!!*

*இன்று எவ்வாறு இக்கோலம் வந்துள்ளது என்ற ஆர்வமே கோலங்கள் வரைவதில் அதிகபடியான விருப்பத்தை ஏற்படுத்துகிறது... இதற்கென நேரங்கள் செலவழித்து அச்சுப்பிசகாமல் கோடுகள் இழுத்து சரியான வண்ணச்சேர்க்கையில் அழகுற மின்னும் போது ஏற்படும் மகிழ்ச்சி வார்த்தையில் அடங்காது... எந்த வேலை எப்படி இருப்பினும் இதற்கென நேரம் ஒதுக்கி மார்கழி மாதம் வரைதல் என்பது எனது பத்து வயது முதல் இன்று வரை தொடர்கிறது எனலாம்... போடப்பட்ட கோலம் வாசலில் அழியாமல் இருந்தால் அதுவே பெரிய சாதனை நிகழ்த்திய உணர்வினை ஏற்படுத்தும்...*

*எங்கள் ஊரில் பொங்கல் விழாக்களில் கோலப் போட்டிகள் நடத்துவர். அதில் பங்கு பெற்று வென்ற அனுபவங்கள் நிறைய உண்டு.. அப்போதெல்லாம் பெரும் ஓவியர் ஆகவே மனதில் கற்பனை ஏற்படும்... மற்றொரு முறையும் சிறந்த கோலங்கள் என தெரிவு செய்து உள்ளூர் தொலைக்காட்சியில் காட்டப் பெற்றபோது அடடா அந்த மகிழ்ச்சி சொல்லவே வேண்டாம்...*

*உடல்நல குறைபாடுகள் மற்றும் பணிச்சுமை அதிகமாக இருப்பினும் அதைத் தள்ளி வைத்து முடியாது நான் போடுவேன் என்ற வீராப்புடன் வரையப்பட்டதுதான் இக்கோலங்கள்.. வெறும் கோலம் மட்டுமல்லாமல் அதனுடன் கோலத்திற்கேற்ப கவிதையும் (மரபுக்கவிதைகள்) பதிவு செய்ய.. ஆகா.. இதை நூலாக வெளியிட்டால் என்ன என்றே தோன்றியது அதன் முயற்சிதான் இது... இந்நூலைப் பார்த்துப் படித்து உங்களுக்குப் பிடித்திருக்கிறதா என்று கருத்துக்களைப் பகிருங்களேன்...*

*இந்நூலைப் பதிப்பித்த தமிழ்நெஞ்சம் அமின் அய்யா அவர்களுக்கும், தஞ்சைத் தமிழ் மன்றம் நிர்வாகிகளுக்கும் எனது அன்பினிய நன்றிகள். பல. நன்றி....*

*என்றும் அன்புடன்*
தென்றல் கவி

*1*

காரென வீசும் கூதல்
கண்களும் பணிக்கக் கண்டேன்
சாரலில் வரைந்தேன் நானும்
சட்டென ஏதோ ஒன்று
காரிருள் கலையும் நேரம்
கண்கவர் வண்ணம் பூசி
மார்கழி முதலாம் நாளில்
மயக்கிடும் உள்ளக் கோலம்





*2*

கலாப மயிலே கள்ள மின்றி
களித்து நோக்குகின்றாய்
பலாவின் மரத்தில் பாங்காய் அமர்ந்தே
பரிசைக் கேட்கின்றாய்
உலாவும் தென்றல் உன்னைத் தொடவும்
உடலும் சிலிர்க்கின்றாய்
அளாவி நிற்க அன்பை வேண்டி
அழகைக் கூட்டுகின்றாய்

*3*

வாசல் கோலம் வகையாய் வரவில்லை
வண்ணம் இழைத்த வடிவம் பிடிக்கவில்லை
வேசம் போடும் மனிதர் போன்றேதான்
வெறுத்துப் போனேன் வரைந்த கோலத்தில்
நேசம் கொள்வோம் நெடிய பயணமாக
நிறைந்த வாழ்வில் நாமும் நிலைத்திடவே
பாசம் பொங்கும் பணிந்த மனமாக
பழக்கம் கொள்ளும் வகையில் நடந்திடுவோம்



*4*



வட்டக் கோலப் பூவின் வண்ணங்கள்
வாசல் எழுதும் அழகுக் கோலங்கள்
கிட்டே வந்தால் மனத்தின் எண்ணங்கள்
கிறங்க வைத்தால் கெலிக்கும் சத்தங்கள்
விட்டு விடவும் விலகா மண்ணுக்குள்
விதைத்த தூய வித்தின் எச்சங்கள்
மட்டிலா மகிழ்வில் மலர்ந்தப் பூங்கொத்துகள்
மண்டிய புதிராய் மறைக்கும் கிறுக்கல்கள்



*5*

அன்னம் இவளே வந்தாள்
அழகு வண்ணம் கொண்டாள்
என்றும் தொடரும் இந்த
எழிலாம் மண்ணில் மாட்சி
இன்று எழுதும் கவிதை
இனிக்கும் மனத்தின் காட்சி
நன்றா என்றே சொல்வீர்
நானும் சொல்வேன் வாழி

*6*



வண்ண மயிலின் தோகைதனில்
வரைந்த பச்சை நீலநிறம்
கண்கள் குளிர வைக்கிறதா?
கருத்தைக் கவர்ந்து இழுக்கிறதா?
தண்ணென் வீசும் பனிக்காலம்
தரையில் எழுதும் எழிற்கோலம்
தென்றல் வீசும் இந்நேரம்
தேடும் இனிமை மனமோங்கும்

*7*

இணைந்த சோடி இதயம் கொள்ள
ஈந்த அழகு இறைவன் அருளே
பிணைந்த வண்ணம் பிறக்கும் அன்பு
பிழையு மின்றிப் பெற்றே வாழ்க
பிணக்கு நீங்கிப் பிடிப்பு கொண்டு
பீடு பெறவும் பெரியோர் வாழ்த்த
மணக்கும் மலராய் மண்ணில் மலர்ந்த
மார்க ழிமாத மாட்சி காண்பீர்!!!





*8*

எதையோ வரைந்தேன் மயிலோ
என்ன அன்னம்? எதுவோ
இதுவே எனக்குச் சற்றும்
இன்று பிடிக்க வில்லை
விதைத்த முத்து நன்றே
விடியல் இழைத்த வண்ணம்
கதைக்க இங்கு நேரம்?
காலை வணக்கம் வணக்கம்

*9*

வண்ணம் இழைத்த தாமரை
வாசம் வீசாத் தாமரை
எண்ணம் எழிலாம் தாமரை
இங்கே மலர்ந்த தாமரை
கிண்ணம் போன்ற தாமரை
கேள்வி கேட்கும் தாமரை
தண்ணீ ரினிலே தாமரை?
தரையில் வந்த தாமரை...



*10*

பூக்கள் பூக்கும் மார்கழி
பொழுதும் குளிர்ந்த மார்கழி
ஈக்கள் பூவில் மார்கழி
ஈண்டு வாழும் மார்கழி
பாக்கள் பாடும் மார்கழி
பசுமை நிறைந்த மார்கழி
மாக்கள் மகிழும் மார்கழி
மனசும் நிரம்பும் மார்கழி





*11*

அழகிய மயிலைக் கண்டேன்
ஆடலின் அசைவில் நின்றேன்
பழகிய தோற்றம் கண்டேன்
பறித்திடும் உள்ளம் கொண்டேன்
வழங்கிய அன்பைக் கண்டேன்
வாயிலில் வசந்தம் என்றேன்
விழுந்திடும் இதயம் கொண்டேன்
விடைகளைப் பெற்றேன் நற்றேன்

*12*

புள்ளிகள் வைத்துப் போடப்
பொறுமையும் எனக்கே இல்லை
தள்ளியே போகும் புள்ளி
தனித்தனி யாக நிற்கும்
பள்ளியும் இல்லைத் தானே
பரிவுடன் கேட்ட லால்நான்
அள்ளியே கலைகள் தந்தேன்
அழகெனச் சொல்வீர் நன்றா?



*13*

புள்ளி யில்லாக் கோலம்
போட வருமே அழகாக
தள்ளி நின்று பாரும்
தரையில் மலர்ந்த பூவினையே
பள்ளிப் பருவ மனமாய்ப்
பார்த்து வியக்கப் பரவசமே
துள்ளிக் குதித்து மகிழ
துயரம் ஓடிப் போய்விடுமே





*14*

வட்ட மாக வரைந்தேன்
வண்ண வண்ணச் சுற்று
பட்டு மெத்தைப் போலப்
பாங்காய் இழைத்தாள் சிட்டு
சொட்டுச் சொட்டாய்ப் பட்டே
சோர்வைத் தந்த துளிகள்
விட்டு விட்டு அழிக்க
விடாது போட்டே முடித்தேன்

*15*

வாசலில் விளக்கின் தீபம்
வண்ணமாய் மிளிரும் காட்சி
பூசனை செய்த மாட்சி
பூக்களாய் வாசம் செய்யும்
காசென நிறங்கள் மின்னக்
கலங்கிடா உள்ள மிங்கே
தூசென நினைக்கும் எல்லாம்
துயரமும் நில்லா தோடும்



*16*



*வானம் இருண்டு மழையும்
வந்து பெய்ய இங்கே....
தேனாய்க் கவிதை உடனே
தென்றல் கோலம் எங்கே?
மானோ மயிலே இல்லை
மயக்கும் வண்ணம் இல்லை
ஆனால் தொடரும் கிறுக்கல்
அழகா நன்றா சொல்வீர்?*




*17*

*சட்டெனப் போடப் போனேன்
சடசட வென்றே பெய்யப்
பட்டென ஏதோ ஆங்கே
படபட  பூக்கள் பூக்க
விட்டிடா வானம் பார்த்தேன்
விறுவிறு வென்றே தூற
மட்டிலா மகிழ்வில் நானும்
வரைந்திடும் கோல வாழ்த்து!*

*18*



*வானின் மழையை எதிர்நோக்கி
வாயில் இங்கே காத்திருக்க
நானோ வரைந்தேன் எளிதாக
நன்றா? சொல்வீர் எழிலாக
வீணே போக மழையில்லை
விரைந்தே இழுத்தேன் வெண்ணிறத்தில்
போனா போகட் டுமென்றேதான்
போன தம்மா வான்மழையும்*

*19*

பிள்ளை இல்லாப் பள்ளி
பீடை திரும்ப வந்தே
அள்ளிக் கொண்டுப் போக
அடடா விடவே மாட்டோம்
தள்ளி விட்டேச் செல்ல
சரியாய் நாமும் இருப்போம்
புள்ளி இல்லாக் கோலம்
புதுமை ஏது மில்லை..





*20*

கொட்டுது மழையு மிங்கே
குளிருது கூதிர்க் காற்று
பட்டெனத் தெறிக்கும் நீரில்
பாய்ந்திடும் தவளைக் கூட்டம்
சட்டெனத் திண்ணைக் கோலம்
சலிப்பிலா அழகும் கூட்ட
விட்டமும் குளிர்ந்து நிற்க
விடியலின் பூக்க ளிங்கே
மொட்டுடன் மலர்கள் வாசம்
முகத்தினில் மகிழ்வைத். தேக்கும்

*21*

சிறியதாய் வண்ணக் கோலம்
சிங்கார எண்ண கோலம்
குறித்திடும் சின்ன கோலம்
கூத்திடும் உள்ள கோலம்
உறிஞ்சிடும் உயிரின் கோலம்
உணர்வுகள் உரைக்கும் கோலம்
பறித்திடும் பூவாய்க் கோலம்
பளிச்சிடும் பாங்காய்க் கோலம்



*22*

பலநிறம் கொண்ட கோலம்
பச்சையும் சிவப்பும் மஞ்சள்
கலந்திடும் வெள்ளை வண்ணம்
களைத்திடச் செய்த கோலம்
உலர்ந்திடும் நாவில் தேநீர்
உவப்புடன் இறங்க இட்லி
மலர்ந்தது பூவைப் போல
மயக்கமும் அகலச் சென்றேன்





*23*

நேரம் ஆன போதும்
நிலைத்து நிற்கும் வண்ணம்
சாரல் அடித்த போதும்
சந்தக் கவிதை ஓதும்
வேரல் போல உறுதி
வெண்மை இல்லாச் சிதறல்
காரம் கொஞ்சம் அதிகம்
கருமை கொண்ட மேகம்.

*24*

மயிலே  தோகை மயிலே
மரத்தில் அமர்ந்தே நீயும்
ஒயிலாய் யாரை நோக்கி
உயிரை வாங்கு கின்றாய்
பயிரை அலகால் கொத்திப்
பசுமை வயலில் மேய்ந்து
வயிறும் நிரப்பு கின்றாய்
வண்ண மயிலே வணக்கம்



*25*

கிறுக்கிய கோலம் இன்று
கிடப்பினில் போட வேண்டா
நறுக்கென போட ஆசை
நானென்ன செய்ய? வேலை
விறுவிறு வென்றே சிக்கல்
விரைவினில் முடித்து வைத்தேன்
சிறையினில் சிரித்த பூவாய்
சிதறிடா எண்ண வோட்டம்





*26*

விடுமுறை நாளின் கோலம்
விடியலின் வட்டக் கோலம்
தடிமனும் பிடிக்கச் செய்த
தட்டுபோல் வண்ணக் கோலம்
கடுமையாய் முயற்சி இல்லை
காலையில் வரைந்த கோலம்
படையென எறும்பு தின்னும்
பச்ச ரிசிமாக் கோலம்

*27*

பானை தூக்கிச் செல்வதெங்கே
பாதை இங்கே உள்ளதம்மா
வானம் இங்கே தெளிஞ்சுருக்கு
வாம்மா அன்பாய் அழைத்தேனே
கானம் பாடி செல்வதென்ன
கல்லு மேடு பள்ளங்கள்
வானம் பாடி போலத்தான்
வாட்டம் நீங்கிச் செல்லம்மா



*28*



*எங்கே இவளும் போகிறாள்?*
*இங்கே பாரு பொன்மணி*
*தங்கப் பொண்ணு கண்மணி*
*சரிகை வண்ண வெண்மணி*
*சிங்கப் பல்லு நன்மணி*
*சிரித்தால் சிதறும் நெல்மணி*
*மங்கை அழகில் பூவணி*
*வந்தாள் கவிதைப் பாமணி*



*29*

*விளக்கு ஏற்றும் பெண்ணே*
*விரைவில் நடையைப் போடு*
*களைத்து விடாதே கண்ணே*
*காலை நேரத் தென்றல்*
*இளைப்பாற் றட்டும் உன்னை*
*இதமாய் இனிக்கும் அள்ளி*
*வளைகள் அணிந்த செல்வி*
*மனத்தில் அமர்ந்த வள்ளி*

*30*



*மடிசார் கட்டு மாமி*
*மணிய டிக்கும் சாமி*
*அடியும் நடந்தாள் நோக*
*அழகி முகத்தைக்  காமி*
*வடித்த சிற்பம் போல*
*வடிவும் அழகு தாமோ*
*சடையைக் கொண்டைப் போட்ட*
*சரசு இவளின் பெயரோ?*

*31*



பொங்கலோ பொங்கல் பொங்கல்
பொலிகவே எங்கும் பொங்கல்
தங்குக மகிழ்வின் பொங்கல்
தமிழென வாழி பொங்கல்
மங்கலம் நிறையும் பொங்கல்
மங்கையின் மனமும் பொங்கல்
வங்கமாய்ப் பெருகும் பொங்கல்
வளங்களும் நிறையும் பொங்கல்



*32*

உழவர் திருநாள் வாழ்க
உயர்ந்த நன்னாள் வாழ்க
கிழமை நன்றாம் வணங்கி
கிழக்கு நோக்கக் கதிரோன்
உழன்ற கவலை நீங்கி
உறவாய் கால்ந டைகளும்
வழமை போல வாழ்த்தி
வளமை சேர்ப்போம் வாழ்க....



*33*

என்ன அழகு!!! இந்தப் பொண்ணு
எங்கே வந்தாள்? அழகுக் கண்ணு
தண்ணீர் குடத்தில் தங்கப் பொண்ணு
மண்ணில் வந்த நிலவுப் பொண்ணு
மங்கை இவளும் விண்ணின் கண்ணு
சங்குக் கழுத்து கோலக் கண்ணு
என்னை மயக்கும் வண்ணப் பொண்ணு
ஏங்கித் தவித்தேன் திரும்பு கண்ணு

*34*



வண்ண மயிலின் ஆட்டம் பாரு
வாகை சூடி வட்ட மிட்டாள்
எண்ண மெல்லாம் ஏற்றம் கொண்டாள்
இந்த நாளை எழிலாய் மாற்ற
மண்ணும் மணக்க மமதை கொண்டாள்
மங்கை இவளும் மானாய்த் துள்ளும்
தண்மை நிகர்த்த தங்கப் பெண்ணாள்
தமிழை வளர்க்கத் தாகம் கொண்டாள்.



*35*

விளக்கேற்றும் வண்ணமயில் ...பூசத் திருநாள்
விடியட்டும்.. மனத்துயரை போக்கச் செய்வாய்..
களைக்கின்ற உள்ளத்தில் கந்தா சரணம்
கைகூப்பித் தொழுகின்றேன் கந்தா சரணம்
வளைக்கரங்கள் விளக்கினையே ஏற்றி வணங்கும்
வள்ளலாரின் வழிநின்று வாழ்த்தும் நன்றே
சளைக்காது நினைக்கின்றேன் முருகா உன்னை
சங்கடங்கள் போக்கிடநீ வருவாய் அப்பா

*36*



ஊஞ்ச லாடும் பெண்ணே
உதவி என்ன வேண்டும்?
சாஞ்சு நீயும் அமர்ந்தே
சரிகை ஆடை உடுத்தி
காஞ்சி ஒஞ்ச மக்கள்
கவலை நீங்கப் பாடி
மாஞ்சி மாஞ்சி ஆடு
மனத்தைக் கொள்ளைக் கொள்ளு

*37*

மரக்கிளை பிடித்துப் பெண்ணும்
மனக்கிளை படர்ந்து நல்ல
உரமென எண்ணத் திண்மை
உடைந்திடா வாழ்வின் வண்ணம்
தரத்தினில் குறையாப் பெண்மை
தங்கமாய் யென்றும் மின்னும்
கரங்களில் பிடித்து வைத்தாள்
கனவுகள் உயர்ந்த பெண்ணாள்





*38*

செம்பருத்திப் பூக்கள் பாரு
சிவந்திருக்கும் அழகைக் கேளு
தெம்பில்லை போடு தற்கே
தொரதொரன மழையு மிங்கே
வம்புசெய்த வானம் கண்டு
வண்ணப்பூ மூன்று உண்டு
உம்மென்ற முகமும் செண்டாய்
உங்களுக்காய் வரைவேன் நன்றாய்

*39*

சிவந்த அழகில் சிரிக்கும் வண்ணம்
சிறிய செயலின் வடிவத்தில்
உவந்து வரைந்த வாசல் கோலம்
உயர்வு காட்டும் அடுக்காக
கவிழ்ந்தே அமர்ந்து கழுத்து வலிக்கக்
கவனம் கொண்டு வடித்தேனே
சிமிழாய் மின்னும் சிறிய அழகு
சிந்தை கவரும் மகிழுங்கள்



*40*

காலை நேரம் வேலைக்குக்
கையில் அரிவாள் எடுத்துட்டுச்
சாலை யோரம் போறவளே
சாய்ச்சி சாய்ச்சிப் போறதென்ன?
சோலைக் குயில் போலநீயும்
சொக்க வைத்துப் பாடறியே
மாலை நேரம் திரும்பையிலே
மாமன் நிற்பேன் பாருபுள்ள





*41*

காலைத் தூக்கி ஆடுகிறாள்
காதல் கொள்ள வைக்கின்றாள்
சோலை வண்டாய் விழிகளுமே
சொக்க வைத்துச் சுற்றுதம்மா
வாலைக் குமரி பெயரென்ன?
வாடி புள்ள ஊரென்ன?
பாலை மனமும் குளிர்ந்ததம்மா
பாவை உன்னைத் தேடுதம்மா

*42*

சின்னப் பொண்ணே நில்லம்மா
சீவி முடிச்சே எங்கேம்மா?
வண்ண உடையில் கண்ணம்மா
வாசல் வரையும் வாறேன்மா
கன்னி மனத்தில் காயமென்ன
காவல் உண்டு செல்லம்மா
விண்ணில் பறப்போம் என்னம்மா!
வீடு வரைக்கும் போவோம்மா



*43*



வட்டக் கோலம் பாருங்கள்
வாழ்த்துச் செண்டு தாருங்கள்
எட்டி நின்றே நோக்குங்கள்
எப்போ வரைந்தேன் கேளுங்கள்
பட்டை வரிதாம் சேருங்கள்
பார்க்க அழகாய்த் தூவுங்கள்
பட்டுப் போலப் பாடுங்கள்
பார்த்துப் பார்த்து ஆடுங்கள்



*44*

நீல ரோசா பூத்திடுமே
நீங்கள் பார்க்கக் கேட்டிடலாம்
காலை நேரம் பூத்ததம்மா
கவர்ந்தே இழுக்கும் சிவப்புநிறம்
நாலு வண்ண மஞ்சளுமே
நமக்குத் தருமே மங்கலமாய்
வாலுப் பிள்ளை பார்த்திட்டால்
வழியே இல்லை பறித்திடுமே

*45*



கோலம் போட வாருங்கள்
கொஞ்சம் வண்ணம் சேருங்கள்
சாலை மீது  செல்வோரும்
சற்றே பார்த்து ரசிக்கின்றார்
நாளை இன்னும் சிறப்பாக
நானும் வரைவேன் பாருங்கள்
காலும் இங்கே வலிக்குதம்மா
காற்றும் கொஞ்சம் கலைக்குதம்மா

*46*



சற்றே கிறுக்கல் இக்கோலம்
சாய்ந்து சாய்ந்து கோடுகளும்
பற்றி வந்தே வளைகிறதாம்
பக்கம் வந்தால் அழகாமே
சுற்றிச் சுற்றி வருகிறதே
சும்மா இழுத்தால் பழகியதே
இற்றுப் போகா பழக்கங்கள்
இங்கே புதுமை காட்டியதே



*47*

வட்டமாய்ப் பூவின் உள்ளே
வளைந்திடும் வண்ணக் காய்கள்
சட்டமாய் வரைந்துப் பார்த்தால்
சரியென தானே தோற்றம்
கிட்டிடும் பறித்தே உண்ணக்
கிண்ணமாய்ப் பூக்கள் சுற்றித்
திட்டமாய் வரைந்த கோலம்
திகட்டிடா அழகின் சாலம்

*48*



வண்ணப் பூவு சின்ன பூவு
வாசல் வரைக்கும் மலர்ந்தபூவு
கிண்ணம் போலக் கிளையில் பூத்துக்
கிறுக்கி போலச் சிரிக்கிறதே
தண்ணீர் கண்டு சிலிர்த்து நிற்கும்
தரையில் மலர்ந்து சிரித்திடுமே
பன்னீர்த் தூவும் மழையின் மேகம்
பார்த்து ரசித்து வியந்திடுமே...

*49*



*வண்ணப் பூக்கள் அடுக்காக*
*வாயில் வந்த மாயமென்ன?*
*பண்கள் போல ஒழுங்கமைப்பு*
*பார்த்து வியக்க யார்பொறுப்பு*
*கண்கள் கொத்தும் அழகினையே*
*கவர்ந்து செல்லல் அழகாமோ*
*உன்னைத் தொடுக்க இயலாது*
*உடனே பறிக்க முடியாது*



*50*

*மயிலின் நிறங்கள் அழகூட்ட*
*மயக்கும் எழிலாய் நிறங்காட்டப்*
*பயிலும் பாடல் அரங்கேறப்*
*படிப்பாய் நூல்கள் பலவாகத்*
*துயிலும் களைந்தே எழுந்திடுவாம்*
*தூதாய்ப் பறவை துணைகூட்டும்*
*இயலும் என்றே நினைத்திடுவாய்*
*இதையே உனக்கு உணர்த்திடுவேன்*






தேவைக்கு தொடர்பு கொள்க...
9344136149

# தென்றல் கவி

## தமிழ்ச்சிட்டு



வரைந்திடுவார் வண்ணவண்ணக் கோலம் வாசல்
வழிந்திருக்கும் அழகினிலே நாளும் பேசும்
எண்ண மெல்லாம் ஏற்றிவைத்த மரபுப்பாக்கள்
எட்டிவைத்து நடையிடுமே உறவாய்ப் பூக்கும்
தண்ணீராய்க் குளிரவைப்பார் விழிகள் கேட்கும்
தாமரையும் பூக்களுமாய் உருவெ டுக்கும்
பண்ணெடுத்து மார்கழியை மயங்க வைக்கும்
பரிசெனவே சாரலுமாய்ப் பன்னீர்த் தூவும்

- தமிழ்நெஞ்சம் அமின்



தமிழ்நெஞ்சம்